# அறிந்து கொள்வோம்
# தீ பாதுகாப்பு



- உங்கள் குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் தீ விபத்து ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என அறிந்து வைத்திருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். விபத்து ஏற்பட்டால் வீட்டில் உள்ள தப்பிக்கும் வழிகளை வரைபடமாக்கி வைத்திருக்க வேண்டும்.
- உங்கள் குடும்ப உறுப்பினர்கள் அவசரகால நேரத்தில் கூடுவதற்காக பாதுகாப்பான ஒரு இடத்தை வீட்டிற்கு வெளிப்புறமாக தேர்வு செய்து வைத்திருங்கள்.
- விபத்து நேரத்தில் வீட்டில் உள்ளவர்களை எப்படி எச்சரிக்கை செய்யவேண்டும் என்பதை பழகிக் கொள்ள வேண்டும்.
- விபத்து ஏற்படும்போது கூச்சலிட்டோ, விசில் அடித்தோ, சுவர்களில் தட்டியோ அனைவரையும் உஷார்படுத்த வேண்டும்.
- விபத்து ஏற்படும் போது துணிகளை எடுத்தல், செல்ல பிராணிகளை தேடுதல், விலை உயர்ந்த பொருள்களைத் தேடுதல், போன்றவற்றைச் செய்யாமல் உடனடியாக அந்த இடத்தை விட்டு வெளியேறவும்.



## முன் திட்டமிடலும் / தயார் நிலையும்

- நீங்கள் இருக்கும் வீடு, பள்ளி, அலுவலகத்தில் விபத்து ஏற்பட்டால் அங்கிருந்து தப்பிக்கும் வழி முறைகளைத் தெரிந்து வைத்திருங்கள்.
- தப்பிக்கும் வழிமுறைகள் குறித்த பயிற்சியினை அவ்வப்போது செய்துபார்க்க வேண்டும். தீ விபத்து ஏற்படும் போது சூழும் புகையிலிருந்து தப்பிக்க இப்பயிற்சி பயனுள்ளதாக இருக்கும்.
- தப்பிக்கும் போது தரையில் குனிந்தபடி தப்பிக்க வேண்டும். அவ்வாறில்லையெனில் தீ விபத்தில் வெளிப்படும் புகையினைச் சுவாசித்தால் இறப்பு ஏற்படக்கூடும்.
- உடைகளில் தீ ஏற்பட்டால் தரையில் படுத்து, உருண்டு, தீயினை அணைப்பதற்கு பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டும்.
- நீங்கள் இருக்கும் இடத்தில் தீயணைப்பான் உள்ளதா என்றும் அவை செயல்திறனோடு உள்ளதா என்றும் அறிந்து வைத்திருக்கவும்.

## தீ தடுப்பிற்கு சில யோசனைகள்

- வீடுகள் / பள்ளி / அலுவலகங்களில் புகை உணரும் கருவியைப் பொருத்துவதுடன் முறையாக இயங்குகிறதா என்று சரிபார்க்கவும். பேட்டரிகளை தேவையான கால அளவில் மாற்றிட வேண்டும்.
- தீ விபத்தில் காயமுற்றோருக்கு உடனடியாக முதலுதவி செய்ய வேண்டும். தீவிரமாகக் காயமுற்றோரைத் தகுந்த மருத்துவரிடம் உடன் சிகிச்சைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.
- தீ விபத்திற்குள்ளான கட்டிடங்களிலிருந்து விலகியே இருக்க வேண்டும். தீ தடுப்பு அலுவலர்கள் பாதுகாப்பானது என அறிவிக்கும் வரை கட்டிடத்திற்குள் செல்ல வேண்டாம்.
- கையடக்க சூடேற்றிகள் போன்ற மின் சாதனங்களை 3 அடிக்கு மேல் உயரத்தில் வைத்து பயன்படுத்தலாம். வெப்பமுண்டாக்கும் மின்சாதனங்களை இயங்கும் நிலையில் வைத்துவிட்டு தூங்கவோ, வெளியில் செல்வதோ ஆபத்தை விளைவிக்கும்.
- தீ விபத்தின் போது மின்சார வயர்களையும், சாதனங்களையும் தொடக்கூடாது.

